சிவமயம்



# அமரர்
# திரு. இளையகுட்டி பேச்சிமுத்து
(முறிவு வைத்தியர், TRAMP Reg 7146)

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த
## 31ம் நாள் நினைவேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அமரர் **இளையகுட்டி பேச்சிமுத்து**

**முறிவு வைத்தியர் (TRAMP Reg 7146)**

அவர்களின்

இறைபதப்பேறு குறித்த

# 31ஆம் நாள்

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்..


அறநெறி தவறாது அன்பு கொண்டு
அன்பால் அரவணைத்து பண்பால்
வழி நடத்திய தந்தையே...
உயிராய் ஒளியாய் எம்மோடு உறவாடி..
தேசம் எல்லாம் வைத்திய சேவை புரிந்து புகழ் பூத்து...
இல்லறத்தை நல்லறமாக்கிய நாயகனே...
எம்மை விட்டு அகன்று தீப ஒளி வீசும்
எம் தந்தையின் திருப்பாதங்களுக்கு...
இந் நூலை சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி.. சாந்தி.. சாந்தி...

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவஞ்சலி



## அமரர்
# திரு. இளையகுட்டி பேச்சிமுத்து

முறிவு வைத்தியர் (TRAMP Reg 7146)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.03.1938 | 27.09.2022 |

### திதிவெண்பா

ஆயும் சுபகிருது ஆண்டுசெவ் வாய்கன்னி
தேயாப் பிறையோ தேரிரண்டில் – ஆயபத்துச்
சித்திரை சேர்நாளில் சீருயிரைப் பேச்சிமுத்து
சித்தனடி சேர்ந்தார் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

கோவிலுறை கணபதியே கோலமயில் நாயகனே
தேவி உடனுறையும் கோணமலையானே
காத்து நின்றீர் காலமெல்லாம் காற்றுடம்பு தன்னை
ஏற்று நிற்பீர் எம் தாயை ஏழுலகும் தன்னில்

## தேவாரம்

நினைந்துருகும் அடியாரை நைய வைத்தார்
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்
சினம் திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்
செழுமதியின் தளிர்வைத்தார் சிறந்து வானோர்
இனம் துரவி மணிமகுடத்து ஏறத்துற்ற
இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்
நல்லூர் எம்பெருமானார் நல்லாவாறே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

இணையார் திருவடி என் தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந் தொழிந்தேன்
அணையார் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புனையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்த்துட் சித்திக்கும் தேனோ
அளிவளர் உள்ளத் ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாதை வீசிய சண்டிக்கின்: அண்டத் தொடுமிடனே
பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும்: போனகமுமருளிச்
சோதிமணி முடித்தாமமும் நாமமும்: தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே: பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித் துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழு பிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

உம்பர் தருந் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தை வலத் தாலருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவலஞ் சுரக்க மன்னன்
கோன் முறையரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இளையகுட்டி பேச்சிமுத்து (முறிவு வைத்தியர், TRAMP Reg 7146) அவர்களின் வாழ்க்கை வரலாறு

ஆதி கோணநாயகப் பெருமான் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் தம்பலகாமம் என்னும் கிராமத்திலே எம் பெருமானுக்கு காவல் தெய்வங்களாக அருள் பாலிக்கின்ற வள்ளியக்கன், அன்னம்மார் தெய்வங்கள் வீற்றிருக்கின்ற தெங்கு, மா, பலா, கதளி, நெல் வயல்கள் சூழ்ந்திருக்கின்ற முன்மாரித்திடல் என்னும் சிறப்பு மிக்க கிராமத்தில் பாங்காயிருந்த இளையகுட்டி நாகம்மா தம்பதியினருக்கு இறையருள் கொண்டு முத்தான மூன்றாவது மகனாக 1938.03.17 அன்று உதித்தார். இவருக்கு மூத்த சகோதரன், சகோதரிகளாக கணவதிப்பிள்ளை, பாக்கியம் இளைய சகோதரர், சகோதரிகளாக கோணலிங்கம், அருந்தவம், புனிதவதி ஆகியோர் உறுதுணையாக அமையப் பெற்றிருந்தனர்.

இவர் தனது ஆரம்ப கல்விதனை இ/கி/ச சாரதா வித்தியாலயத்தில் கல்வி கற்று கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் பல சாதனைகளை புரிந்து ஆசிரியர்களினதும், தம் சக மாணவர்களினதும் பாராட்டினையும் நன் மதிப்பையும் பெற்றார். அத்துடன் தனது தந்தை, பாட்டனாரிடமிருந்தும் தமது பரம்பரை வைத்திய முறைகளையும் கற்றுக் கொண்டார். இருந்த போதும் தனது தந்தையின் இழப்பை தொடர்ந்து கல்வியை இடைநிறுத்தி தந்தை விட்டு சென்ற விவசாய தொழிலினை தனது குடும்ப பொறுப்பிற்காக முழு பங்களிப்புடன் செய்யும் தொழிலே தெய்வம் எனும் தத்துவத்திற்கு இணாங்க முறைப்படி மேற்கொண்டு வந்தார். இன்னிலையில் தனது தாய்மாமன் மகளான கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியான மகேஸ்வரியை கரம்பிடித்து இல்லற வாழ்க்கையை இனிதே ஆரம்பித்தார். இதன் பயனாக விஜயகுமாரி, ஜெயகுமாரி, சுரேஷ்குமார், ரமேஷ்குமார், டினேஷ்குமார், ஆகிய குழந்தைச் செல்வங்களையும் பெற்றெடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லும் பகலும் அயராது விவசாய பயிர்ச்செய்கையை தமது கிராமத்தில் மட்டுமன்றி, அயல் கிராமமான கந்தளாய், மூதூர், சேருநுவர போன்ற பிரதேசங்களில் மேற்கொண்டு, தனது தொழிலை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் நெல்லு வியாபார தொழிலையும் மேற்கொண்டார். இதன் பயனாக கொழும்பு, குருநாகல், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களின் சகோதர இன உறவுகளோடும் தொழிலில் ஈடுபட்டார், மேலும் வியாபார தொழிலதிபர்களின் நன்மதிப்பையும், உறவுகளையும் பெற்றுக் கொண்டார். இவ்வாறு விவசாயம், நெல்லு வியாபாரம், மாடு வளர்ப்பு போன்றவற்றில் தேர்ச்சி பெற்று செல்வ செழிப்புடன் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகையில் 1980 -1983ம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக, இத்தொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்ள முடியாமல் போய் விட்டதன் காரணத்தினால் தனது கிராமத்திலே முடக்கப்பட்டார். ஆடியோடி அல்லும்பகலும் அயராது உழைத்த மனிதனுக்கு ஓய்வாக வீட்டில் சும்மா இருப்பதென்பது கடினமாக இருந்தது. இதனால் தனது தந்தை, பாட்டனாரிடம் கற்றுத்தேறிய பாரம்பரிய வைத்திய முறையினை, மக்களுக்கு சேவையாக செய்ய வேண்டும் என்ற ஆவல் இவரது மனதில் உதித்தது. சுயதேடலும், நுண்ணறிவும் சிந்தனைசக்தி, இறைபக்தி, விடாமுயற்சியும் இவரது வைத்திய துறையினை முன்னெடுத்து செல்ல உறுதுணையாக இருந்தது. கை, கால் உடைந்து, உடம்பு செயல் இழந்து தம்மை நாடி வரும் பல நோயாளிகளின் பிணியை தீர்த்து மறு வாழ்வு அளித்தார். வரமுடியாது வசதியற்ற நோயாளர்களை வீடு நாடிச் சென்று அவர்களுக்கும் மறுவாழ்வு கொடுத்தார்.

மேற்க்கத்தேய வைத்திய முறையினால், கை விடப்பட்ட பாரிய முறிவு, தறிவுகளையும் தனக்கே உரித்தான விசேட வைத்திய நுட்பமுறைகளை கையாண்டு வெற்றியும் கண்டார். அதன்மூலம் பல விருதுகளையும் பெற்றுக் கொண்டார். எதிலும் எளிமையாகவும், நேர்மையாகவும், சுய கௌரவத்துடன் சகல இன மக்களுடன் எளிதில் அன்பாக பழகிய அனைவரினதும் நன்மதிப்பையும் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது வைத்திய சேவை நலனை கௌரவித்து தம்பலகாமம் ஆதிகோணநாயகர் தேவஸ்தானம் 2009ம் ஆண்டு பாராட்டுப்பத்திரம் வழங்கி கௌரவித்து, தம்பலகாமம் பிரதேச செயலகத்தினால் 2014இல் நடாத்தப்பட்ட இலக்கிய பெருவிழாவில் இவரது 40 வருட வைத்திய சேவையினை பாராட்டி கௌரவிப்பு நடாத்தப்பட்டது. 2018ம் ஆண்டு கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் இவரின் பல தசாப்பதங்கள் வினைத்திறன் மிக்கதாக நிறைவேற்றப்பட்ட வைத்திய சேவையினை பாராட்டி கௌரவிப்பு கேடயம் வழங்கப்பட்டது. அத்துடன் இவர் சுகயீனம் உற்றிருந்த வேளையில் 2020ம் ஆண்டு கிண்ணியா பிரஜைகள் சங்கம் இவரின் வீடு தேடி வந்து அரைநூற்றாண்டு காலம் இவரால் மேற்கொள்ளப்பட்ட வைத்திய சேவையை பாராட்டி "வைத்தியமுத்து" என்ற பட்டம் மற்றும் பரிசு பொருட்களையும் வழங்கி கௌரவித்தனர்.

தனது குடும்பத்தின் மீது அதிக அக்கறையும், பாசமும் கொண்ட இவர் தனது பிள்ளைச் செல்வங்களின் கல்வியில் அதிக அக்கறையும், ஈடுபாடும் கொண்டு அவர்களை வாழ்க்கையில் முன்னேற்ற உறுதுணையாக இருந்தார். மேலும் பேரக்குழந்தைகளுடனும், சுற்றத்தாருடனும் இன்சொல் பேசி அவர்களின் மனதில் நீங்கா இடத்தினை பெற்றுக் கொண்டார். அத்தோடு தான் சுயமுயற்சி தேடலினால் கற்றுக் கொண்ட வைத்திய சேவை மக்களுக்கு சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் அவ் வைத்திய முறையினை தனது உறவுகளுக்குக் கற்றுக் கொடுத்தார்.

தனது வாழ்நாளில் ஆடம்பரமோ, ஆர்ப்பாட்டமோ அற்ற மிக எளிமையான வாழ்வைக் கொண்ட அவர் உடற்சுகயீனம் காரணமாக **27.09.2022** அன்று காலை 10 மணிக்கு அவரது வீட்டில் வைத்து இறைவனடி சேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

அறவழி வழி நின்று
அகிலம் தனை வென்று
அன்பு முழுதும் தந்து - எனை
ஆட்கொண்ட திருவுருவே.
முத்தாய் என் சொத்தாய்
பண்பாளராய் என்னில் பாதியாய்
எனை ஆளும் வேந்தரே
நீரே கதியென
உம் நிழல் நானென.
உம் பாதச்சுவடு என் வழியென
காலந்தோறும் வாழ்ந்தேனே.
கண்ணின் இமையாய் காலமெலாம் எமைக் காத்தீரே!

காலம் செய்த கோலமோ
கடவுள் விட்ட ஏவலோ
விடை எனக்குப் புரியுமுன்னே
எனைத் தவியாய் தவிக்க விட்டு
நீர் மட்டும் சென்றுவிட்டீரே!
சொன்ன சொல் மாறாது
உம்மில் பாதி நானென வாழ்ந்த நான்
உம்மைப் பிரிந்து ஒரு கணமும் வாழ்வேனோ!
நீர் வரும் பாதை தேடுது விழி நித்தம்
உம் காதில் விழவில்லையோ என் அழுகைச் சத்தம்
கண்ணின் மணியே, என் காப்பே, என் துணையே
உம் விம்பமாய் நம் வாழ்வுக்கு அடையாளமாய்
வாழும் நம் குஞ்சுகளுக்காய்
வாழும் என்றும் உம் துணை.

ஓம் சாந்தி சாந்தி....

"பெற்றாற்பெறின் பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழாம் உலகு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் புலம்பல்

தவமாய்த் தவமிருந்து கேட்டாலும்
தரணியில் எவர் பெறுவார் - எம்மைப்போல்
தரமான தந்தையை
பெறலில் பெறும் பேறாய், வரமாய்
வாய்த்த எங்கள் அன்பான ஐயாவே!
கைகட்டி, கையேந்தி பிறர் முன் நிற்காமல்
கல்வியில் நாம் உயர
கரிசனை காட்டி, நல்லுரைகள் பல உரைத்து
நாம் வாழ வழிகாட்டிய எம் ஐயாவே!
நாங்கள் இன்புற்று வாழ
நீங்கள் மெழுகுவர்த்தி ஆனிரே
ஊன், உயிர் உருகி காலமெலாம் எமைக் காத்த - அன்பு தெய்வமே,
பண்பின் திருவுருவே!
பாசத்தின் இலக்கணமே, நேசத்தின் இருப்பிடமே!
உம் பிரிவால், சிறகொடிந்த பறவைகளாய்
பாரினில் பரிதவிக்கிறோம் ஐயா!
பொய்யான இப்பூவுலகைவிட்டு
கைலாசம் வாழ இறையோனின் இறைபாதமடைந்தீரோ ஐயா!
உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம் நாம் இங்கு.

தந்தை என்னும் உறவின் ஆதிக்கத்தையும் பாசத்தையும் அவர் அருகில் இருக்கும் போதோ அல்லது தொலைவில் இருக்கும்போதோ எவராலும் உணர்ந்து கொள்ளமுடிவதில்லை. ஏதோ அவர்கள் சுகமாக இருக்கின்றார்கள் என்று கருதியவாறே எல்லோர் வாழ்க்கையும் தொடர்கின்றது. இதற்கு நாம் மட்டும் விதிவிலக்கல்ல. ஆனாலும் எப்போது அவர்களை மீண்டும் இனி ஒரு முறை காண முடியாது என்னும் நிலை வருகின்றதோ அன்று தான் நாம் அதன் பாதிப்பையும் வலியையும் தாக்கத்தையும் உணர ஆரம்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தை என்ற கடமையிலிருந்து அவர் என்றுமே தவறியதில்லை. எமக்குத் தேவையான அனைத்து தேவைகளையும் விருப்பங்களையும் செல்வங்களையும் அந்தந்த நேரங்களில் அவர் நிறைவேற்றியுள்ளார். தான் சுகயீனம் உற்றிருந்த வேளையில் கூட எமக்கு சிறிய சுகயீனம் வரும் வேளை எமது நலனில் அக்கறை கொண்டு மருந்து எடுக்க சொல்லியும் கண்முன்னே காணும் போதெல்லாம் நலம் விசாரித்துக் கொள்வார். அவருடைய பாசம், அரவணைப்பு, ஆலோசனைகள், குடும்ப திட்டமிடல்கள், தீர்மானங்கள் ஒவ்வொன்றும் ஒன்றன்பின் ஒன்றாக எமது கண் முன்னே அலை மோதிச் செல்கின்றன.

ஐயா உங்களின் சிறந்த திட்டமிட்ட தூய சிந்தனையினால் இன்றும் எமது கூட்டு குடும்ப வாழ்க்கை முறை சந்தோசமாக நிலைகுலையாமல் நிலைத்து நிற்கின்றது. 27.09.2022 அன்று உங்களது உயிர் எம்மை விட்டுப் பிரிந்தாலும் நீங்கள் விட்டுச் சென்ற பணியினை, நாம் தொட்டுச் செல்வோம் ஐயா.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்"**

**பொருள் :-**

உலகத்தில் வாழ வேண்டிய அறநெறியில் நின்று வாழ்கிறவன், வானுலகத்தில் உள்ள தெய்வ முறையில் வைத்து மதிக்கப்படுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்தாய் - மாமா
குடும்பத்தின் சுமை யாவும் தாங்கி நின்றாய்
நேற்றைக்கு எம்மோடு அருகிலிருந்தாய்
நெஞ்சுக்கு நெருக்கமாய் துணையிருந்தாய்

போற்றிப் புகழ்ந்திருந்தோம் மாமா - உங்களை
போய் முடிந்து போனாயோ எமை மறந்து...
மருந்தெனவே உன் குரலில்
மறந்து நின்றோம் துன்பம் - நீ
மறைந்த பின்னே வாடுகின்றோம் - நாம்

திங்கள் ஒன்று சென்று விட்டது - ஆனால்
ஆறவில்லை உம்மை நினைத்து எம் துயரம்
உதிர்ந்து நீங்கள் போனாலும்...
என்றும் அழியாது உங்கள் நினைவுகளும் கனவுகளும்
வாழ்வில் நாம் சிறக்க வழிகாட்டுங்கள் - மாமா

உங்கள் ஆத்மா இறைவனடியில்
அமைதி பெற வேண்டுகின்றோம் நாம் இங்கு..

**ஓம் சாந்தி சாந்தி**

**மருமக்கள்மார்**

**"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந் தார்"**

**பொருள் :-**

தம் மனதை மகிழ்விக்கும் கல்வியினால் உலகம் மகிழ்வதைக் கண்டு கற்று அறிந்தவர்கள் மேலும் கற்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகளின் புலம்பல்

உன் வீட்டு வாசல் படிகளை
என் பாதங்கள் தொட்டு நிற்கவே
வா என் வீட்டு மகாலட்சுமி என்று
அன்பாய் அழைத்தவரே!

தந்தையாய் உடன் நின்றாயே
தாழ்த்தி விடவில்லை - என்றும்
உயர்த்தி விட எண்ணினாயே
என் அன்பிற்கினிய மாமாவே!

கண்கள் இமைக்க மறந்து
இதயம் துடிக்க மறந்து
காலன் உன் இராஜ்ஜியத்தைக்
கைப்பற்றி விட்டதேன்!

அமைதியாய் துயில் கொண்டு
கல்லறை வாசல் தேடி
நால்வர்கள் சுமந்து - மீள வழி
இல்லாமல் செல்கிறாய்!

இறுதி ஊர்வலத்தில் - கண்கள்
இமையாது காண்கின்றேன்
துன்பக் கடலில் மூழ்கினேன் - நீ
மீண்டெழ போவதில்லை என்பதாலே!

நீர் நிறைந்த விழிகளோடு
பாசத்தின் பிடியினில் - மாமா
உனக்காய் எழுதுகிறேன்
அன்பு மருமகளின் இரங்கல் வேதனை

அன்பு மருமகள்
நிவாஷினி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் ஐயா!!....

அன்பிற்கு இலக்கணமாய் தரணியில் வாழ்ந்து
நற்பண்புடைமை காத்து பக்குவமாய் வாழ வழி காட்டிநீர் - ஐயா!
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோருக்கும் நல்லவராய், நாணயமாய் நடந்தீர்களே!...
யார் கண்பட்டதோ?..... எங்கள் ஐயாவிற்கு!....

துன்புற்றோர் துயர்துடைத்து எண்ணில்லா துணைக்கரமாய்
பல அடைக்கலம் தந்த உம்மை ஆண்டவன் ஏனழைத்தான் - ஐயா!...
முறிந்து வரும் மானிடர்களுக்கு மறு பிறவி பல கொடுத்தும்
மனித நேயத்துடன் சேவை புரிந்தீர்கள் - உம் கால் தடம்
பதியாத இடம் உண்டோ இவ் ஊர்தனில்!...

வார்த்தை தடுமாறுகின்றதே நேற்றுக் கண்ட உமை நினைத்து
நெஞ்சம் உருமாறுகின்றதே!.. எம்மை கண்டதும்
புன்சிரிப்புடன் சாயம் என கேட்பீர்களே?... இனி யாருக்கு கொடுப்போம்
திங்கள் அன்று இரவு தந்தோமே ஐயா சாயம் அதுதான்
இறுதி சாயம் என தெரியவில்லையே - உம் பேரப்பிள்ளைகளுக்கு ஐயா!...

கதி கலங்கி ஆறாதுயரத்தில் தவிக்கின்றனர் - ஐயா உம் பேரப்பிள்ளைகளின்
மனம் காந்தமாய் எமையீர்ந்த தலை விருட்சமே! ஐயா. காலன் கவர
மண்ணோடு உங்கள் பூதவுடல் மறைந்து விட்டாலும்
உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் இருந்து ஒரு போதும்
மறைய போவதும் இல்லை....

அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா இறைபாதம் சேர இறைவனை வணாங்குகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !!

**இவ்வண்ணம் - பேரப்பிள்ளைகள்**
**சர்விகா, மிதுலா, கிருட்ஷனா, கனிசிகா,**
**யதுட்ஷனா, மிதுட்ஷனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு குறிப்பு....

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியான ஆதி - கோணநாதப்
பெருமான் பசுமை நிறைந்த நெற்பொன்மணிகள் விளையும் தம்பை தனில்
குடியமர்தார் புதுக்குடியிருப்பில் இளையகுட்டி பேச்சிமுத்து ஐயா
மகேஸ்வரி அம்மாவை நல்லறம் புரிந்து ஓர் ஐந்து
மழலை செல்வங்களுடன் சீரும் சிறப்புடன் வாழ்ந்து வந்தீர்களே!! ஐயா...

காலனவன் கவர்ந்தானோ? உம் இரு செல்வங்களை - இருந்தும்
மனம் தளராது குடும்பத்தை சிறப்புற வழிநடத்தி வாழ்ந்தீரே - ஐயா!
செய்யாத தொழில்கள் எதுவும் உண்டோ?.. உம் நாமம் தெரியாது
எவரும் உண்டோ??... ஐயா முறிவு வைத்தியர் என சொல்லிட
தன்னடக்கமும் மனிதாபிமானத்துடனும் பணிபுரிந்தீர்களே!.. பேச்சிமுத்து ஐயா.

பேச்சால் வல்லமை கொண்டவரும் அடக்கத்தின் இருப்பிடமாகவும்
பண்பின் பெருந்தகையாகவும் பாசத்தின் உறைவிடமாகவும்
மிகுந்த இறைபக்தி உடையவரும் எம்மத்தியில் மாபெரும் உத்தமரே!...
பண்புள்ளோரை பல காலம் வாழ விடக் கூடாதென்றோ?....
என்செய்வோம் இறைவன் சித்தம் இது....

காலங்கள் ஓடின ஓடி உழைத்தது போதும் என படைத்தவள் நினைத்தானே?.
கடந்த மூன்று வருடங்களாக கடும்பாடுபட்டீர்களே!... உம் உடலினால்
இருந்தும் உம்மை நாடி வருபவர்களிடம் புன்சிரிப்புடன் நலன் கேட்பீரே!...
நீர் இருக்கும் இடங்களினை தேடுகின்றது எமது கண்கள் இது தான்
நிஜம் என்பதனை இன்று வரை உணர முடியவில்லை - எமக்கு ஐயா!

உமக்கு பிடித்த நாளாம் ஐயா நவராத்திரி தினத்தன்று புரட்டாதி திங்கள்
இரவு நீர்படும் வேதனையை காண இயலாது கதிரவன் உதயத்துடன்
உம் மகளும், மகனும் அழைத்து செல்ல வந்தனரோ? - ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும் எங்கள் முன்னே உங்கள்
முகம் எந்நாளும் உயிர்வாழும் மண்விட்டு மறைந்தாலும் நீங்கள் விண்நோக்கி
சென்றாலும் கண்விட்டு ஞாபகம் மறையாமல் கனகாலம் எம்முடன் இருப்பீர் - ஐயா!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

**பேரப்பிள்ளை**
**சர்விகா**

**"துன்புறாஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்**
**இன்புறூ உம் இன்சொல்வர்க்கு"**

பொருள்:-

யாரிடத்திலும் இன்புறத்தக்க இன்சொல் வழங்குவோர்க்குத் துன்பத்தை மிகப்படுத்தும் வறுமை என்பது இல்லையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு

வாசமிகு புசைசெய் முன்மாரித்திடலில்
இனியவர் இளையகுட்டி, நாகம்மாவும்
ஈன்று எடுத்த பெரிய முத்து
பேச்சிமுத்து நீ சிறுவயதிலிருந்து
குடும்ப பாரத்தை உன் தலையில் சுமத்தாய்.

## வாழ்வு

வாய்த்த மனைவாட்டியுடன் வளமான
வாழ்வு அமைத்தாய் நெருங்கிய இடமெல்லாம்
நெல் வயல்கள் தேடி வைத்தாய்
மனைகள் பல அமைத்து உன்மக்களுக்கு வாழ்வு அளித்தாய்.

## தொழில்

உடைவு முறிவு வைத்தியம் உனக்கு கிடைத்த
வரம் ஐயா அதனை நலமாக பயன்படுத்தி நல்மக்கள்
மனதில் நீங்காத இடம் பிடித்தாய் ஐயா
ஓய்வு எடுக்கும் நேரத்திலும் அன்பளிப்பு பாராட்டும்
கௌரவிப்பும் உன் வீட்டுக்கதவைத் தட்டின ஐயா
அது உன் அயராத உழைப்புக்கு கிடைத்த பரிசில்கள்
உடைவு முறிவில் சிகரத்தை தொட்டவன் நீ ஐயா

## மரணம்

ஈன்று எடுத்த முத்துகள் ஐந்து அதில்
இரண்டு இடையில் செல்ல அவர்கள்
சென்ற இடம் தேடி நீ செல்ல நினைக்கையில் ஐயா
எமது பாசக்கயிற்றில் உன்னை இழுத்து பிடிக்க முடியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா சென்று வா என சிரமம் தாழ்த்தி விடை கொடுத்தோம்
நீ சொர்க்கத்துக்குச் செல்ல வேண்டும் என சொர்க்கநாதரிடம் சொல்லி உள்ளோம்.

குடும்பத்தின் குல விளக்கே உமது குடும்பத்தை காத்து அருள்வாய்யாக ஐயா

பேரப்பிள்ளை
பு. கிருட்ஷனா

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்."

பொருள்:-

அன்பிற்கும் கூடப் பிறர் அறியாமல் தன்னை மூடி வைக்கும் கதவு உண்டோ? இல்லை தம்மால் அன்பு செய்யப்பட்டவரின் துன்பத்தைக் காணும் போது வடியும் கண்ணீரே அன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல்கள் தீர்த்த இனியவனே

அயராத உழைப்பும் ஆளுமையும் நிறைந்த
அன்புள்ள கணவராய் அக்காவுடன் இணைந்தீரே
பெயரது முத்தான மூத்த மருமகனாய்
பெருமையுடன் பொறுப்பேற்ற பெரிய ஐயாவே
துயரது வந்தபோது துடைத்துவிடும்
தகப்பனாய் தடுத்து எமைக் காத்தீரே
வியத்தகு வைத்திய சேவை செய்து
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தீரே

வாழ்க்கையிலே வசதிகள் வந்தபோதும்
எளிமையாக வாழ்ந்து நிறைவோடு நிம்மதி கொண்டவரே
வீழ்ந்தவர்க்கு நிமிர்ந்து நிற்க ஊன்றுகோலாய்
உதவிகள் பல செய்த உத்தமரே - உம்மைச்
சூழ்ந்தவர்க்கும் சுற்றத்தார் அனைவருக்கும்
சுவையான கதை சொல்லி நல்வழி காட்டினீரே
ஆழ்ந்த அமைதி கொண்டு அமரத்துவம் அடைந்த
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்

**மகள் போன்ற மைத்துனி**
**மனோன் (அவுஸ்ரேலியா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெறா மக்கள், பேரப் பிள்ளைகள் புலம்பல்

மாதா, பிதா, குரு, தெய்வம் இந்த
வார்த்தைக்கு நீங்கள் தானே அர்த்தம்
போதாத காலமோ அய்யா எம்மைப்
புலம்ப விட்டுப் போனதேனோ அய்யா....!!!

சொல்லுக்கு நூறு தரம் - எம்மை
நலம் கேட்ட நட்பான ஐயாவே!
சொல்லத் துடிக்குதையா மனது - நீ
சொல்லாமல் போனதேனோ மறைந்து...

குணத்தில் ஏது குறையும் கொண்டிராத எங்கள் ஐயாவே!
எம் குலத்தில் பிறந்து வந்து
எம்மை ஆண்ட தெய்வமே.

**ஜினோ, சனோ, தனோமி**
**நிஜன் மற்றும் பேரப்பிள்ளைகள்**

## ஆசையே! அழியாத சொத்து நீ

மாமா என்னும் சொல்லை மனதாற கேட்டிராய் நீ
உன் அக்கா, தங்கை உறவெல்லாம் அன்பாக
ஆசை என்றே அழைப்பர் அது உமக்கு ஆசை
எமக்கு பேராசை ! ஆசை என யாரை அழைப்பது என
தெரியவில்லையே ஆசையே!!

ஆசையே நீ எமக்கு கிடைத்த அழியாத சொத்து

**பாசமிகு மருமக்கள்**
**பிள்ளைகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய சகலனே!

எனது 10 வயதிலிருந்து பேச்சிமுத்து அண்ணன் பற்றிய நினைவுகளை மீட்கக்கூடியதாக உள்ளது. அம்மாவை கோகுலத்தின் தாய் என்றே அழைப்பார். பாலம்போட்டாறில் வயல் செய்ய வருகின்றபோது எங்கள் வீட்டிற்கும் வந்து போவார். என்னிடம் திருக்குறளின் பொருள் கேட்கும்போதுதான் கொஞ்சம் சிக்கலாக இருக்கும் ஓடி விடுவேன். அப்புச்சியோடு மிக மரியாதையாக பழகுவார். பொதுவான நாட்டு நடப்புக்கள், அரசியல் பிரச்சனைகள் பற்றி கலந்துரையாடும் போது கூட பெரிதாக விவாதிக்கமாட்டார்.

பின்னர் சகலனாக வருவாரென்றோ, நான் அவரது மனைவியின் தங்கையுடன் திருமணமாக அவர் வீட்டிலே வாழ அன்போடு இடம் தருவார் என்றோ நான் எண்ணி இருக்கவும் இல்லை, எதிர்பார்க்கவும் இல்லை. பின்னர் பரியாரி ஐயா என்றே அவரை அழைத்தோம். துரைக்குட்டி அத்தான் கூட "எங்கே பரியாரியைக் காணோம்" என்றே கேட்பார். எல்லோருடனும் மரியாதையுடனும் பேசுவார். சற்று கோபக்காரன். சுவாரசியமான கதைகள் சொல்லி எல்லாரையும் சிரிக்க வைப்பார். ஞாபக சக்தி அதிகம். பத்திரிகை வாசிப்பார், அவர் மேலும் படிக்க இளமையில் வாய்ப்பு இருந்திருந்தால் ஒரு சட்டத்தரணியாக வந்திருப்பார் என்று நான் நினைத்திருக்கின்றேன். அரசியல் பற்றி பிறருடன் ஆதாரங்களுடன் தர்க்க ரீதியாக விவாதித்து பேசுவார். தெளிவான சிந்தனை உடையவர், எந்த வேலையையும் கவனமாகவும் சரியாகவும் செய்வார், கடின உழைப்பாளி, வீணான செலவு செய்ய மாட்டார். சேமிக்கத் தெரிந்தவர்.

மாமிக்கு முறிவு மருந்து கட்ட உதவி செய்ய வைத்தியரிடம் சென்றபோது அதை நன்கு கவனித்து மருந்துகளையும் மருந்து கட்டும் நுட்பங்களையும் ஆர்வத்துடன் அறிய முயற்சித்தார். அதனால்தான் பின்னர் அந்த வைத்தியத்திலேயே ஒரு கைதேர்ந்த நிபுணராக அவரால் வர முடிந்தது. திறமை, ஆர்வம், தேவையான கடின உழைப்பு, பொறுமை, நிதானம் என அத்தனையும் அவருக்கு இருந்தன. மற்றவர்கள் அவரைப் போடியார் என்று கூட அழைப்பார். ஆனால், எந்த ஆடம்பரமும் அற்ற சாதாரண வாழ்க்கையினையே தொடர்ந்தார். அதுவே அவரது இயல்பாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைக்கு பிள்ளைகளிற்கும் குடும்பத்திற்கும் தன்னால் இயன்றவரை சேமிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடும் திடகாத்திரத்தோடும் செயற்பட்டார். வேண்டியவர்களுக்கு உதவியும் புரிந்தார். தமிழ், முஸ்லிம், சிங்களவர் என்று பாராமல் முறிவு வைத்திய சேவையினை அவரால் முடியும்வரை வழங்கினார். அவரது இறுதிச் சடங்கில் எத்தனையோ பேர் நன்றி உணர்வோடு பேசினர். "கருணைக் கடல் என்றுன்னை தேடி வந்தவர்களின் வேதனைகளை தீர்த்தவர். தொடர்ச்சியாக மனைவி, மகன்மார், மருமகன் என்று எல்லோருக்கும் இந்த புனிதமான சேவையை பழக்கி விட்டே எம் எல்லோரையும் விட்டுப் பிரிந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**சண்முகம் குலசிங்கம்**
**(சகலன், அவுஸ்ரேலியா)**

**" ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை"**

**பொருள் :-**

சோர்வின்றி முயற்சி செய்பரிடத்து செல்வமானது அவர் இருக்கும் இடம் தேடிவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். Dr.இளையகுட்டி பேச்சிமுத்து (முறிவு வைத்தியர் T.R.A.M.P Reg 7146)

நாகம்மா இளையகுட்டி புத்திரரே
நாளெல்லாம் உழைத்துவிட்ட மித்திரரே
யோகமான துணை மகேஸ்வரியை மணந்தவரே
யோதிபோன்ற பிள்ளைகளைப் பெற்றவரே
ஆகமங்கள் கண்டறிந்த ஆனந்தரே
ஆலமரம்போல் பரந்து நின்ற ஆன்மாவே
மேகம்போல் பரந்தமுழு வைத்தியரே
மேதினியில் மேலோங்கி உயர்ந்தவரே
சோகமான உன்பிரிவால் வாடுகின்றோமே
சோதனைகள் தாண்டி அஞ்சலி செலுத்துகின்றோமே
வேகமாக வைத்தியசேவை செய்த வைத்தியரே
வேள்விகளும் யாகங்களும் வெற்றிகொண்டோரே
பாகமாக புதல்வர்களாம் சுரேஷ்டினாவையும்
பாசமுள்ள வாரிசாக உருக்கொடுத்தாயே
தேகமதிலே எலும்புமுறிவை தீர்த்த வித்தகரே
தேசமெல்லாம் உன்புகழை பாராட்டுமே
யூகமாக முறிவுசேவை முழுமை செய்தாயே
யூதரவாபோல் யோசனையாய் வெற்றிகொண்டாயே
சாகரம் போல் அஞ்சலிதனை செலுத்துகின்றோமே
சாந்திபெறவே உன் ஆன்மா சாந்திபெற வேண்டும்

தம்பலகமம் தளைத்தோங்கும் பூமியிலே
தாருண்யசேவை செய்த மகாமனிதரல்லோ
நம்பி வந்த நோயாளி மக்களெல்லாம்
நலமாக சுகம் பெறவே சேவை செய்தாய்
சம்பிரதாய வைத்தியத்தைச் சீராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் படுத்தி வெற்றிகொண்ட மேதாவே
கும்பமது வைத்தது போல் குதூகலிக்க - உன்
குழந்தைகளை வாரிசாக ஏற்றிவைத்தாய்
தம்பிமார் இல்லையென்ற குறைபோக்கி
தனயனாக பிள்ளைகளை வழிகாட்டி
வெம்பிவேகும் பாரியார்தான் குறைநீங்க
வெற்றிக்கொடி ஏற்றிவிட்டு மறைந்தாயோ
அம்பிகையின் பாதத்திலே உன் ஆன்மா
அலங்காரம் வீற்றிருக்கும் சொர்க்கம் கண்டேன்.
தும்பிமுகம் போல் இருந்த உன் உருவம்
துயரினிலும் தூபமிட்டு ஒளிக்குதய்யா
கம்பிகளை பொருத்தாத உன்கட்டுவைத்தியத்தை
களங்கமறப் பூரணமாய் சிகிச்சை செய்தாய்
சம்பூரண சர்வேசன் கைலையிலே
சாந்தி பெறவேண்டும் ஐயா உன் ஆன்மா

நல்லவர்கள் நாலுபேரும் நன்றி சொல்ல
நாநிலமும் நீர்சொரிந்து கண்ணீர்மல்க
பல்லவர்போல் பல்லக்கிலே பவனிசென்றாய்
பார்முழுதும் பரிதவித்து ஏங்கிநின்றன
தில்லையிலே ஆடுகின்ற நடராஜன்
தீமூட்டி உன்வரவை ஏற்றுநின்றார்
எல்லையிலே காவலனாய் வீற்றிருப்பாய்
ஏழைகளை என்றென்னும் வாழத்துரைப்பாய்
தொல்லைகளை தீர்த்துவைக்கும் துணையாக
துயரறுத்து நோய்தீர்த்து தொடர்ந்து நிற்பாய்
நெல்வயல்கள் விளைவுபெறும் உன் பெயரால்
நேர்த்திசெய்யும் உழவருக்கும் பலித்து நிற்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லமான உன் பெயர்தான் பேச்சிமுத்து
செயல்படுத்தும் உன்சேவை பேச்சில்முத்து
கல்லுமதும்கரைந்தும் உந்தன் கட்டுச்சிகிச்சை
கடல்தாண்டி உலகமெல்லாம் பரவவேண்டும்
மல்லிகையின் பூக்களெல்லாம் மாற்றான் தோட்டம்
மணக்காதோ மாநிலத்தின் மக்கட்கெல்லாம்
பல்லாயிரம்கோடி மக்கள் நலம் பெறவே
பரிகாரம் செய்த ஆன்மா சாந்திவேண்டும்

Dr.பொன்னம்பலம்
சாமித்தம்பி J.P.R.A.M.P
வைத்தியர் குடும்பம்
கல்முனை

திருக்குறள் முதன் முதலில் அச்சிடப்பெற்ற ஆண்டு – 1812
திருக்குறளின் முதல் பெயர் – முப்பால்
திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் – 133
திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் – 380
திருக்குறள் பொருட்பாலில் உள்ள குறட்பாக்கள் – 700
திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள குறட்பாக்கள் – 250
திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள் – 1330
திருக்குறளில் உள்ள சொற்கள் – 14000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்று வாருங்கள் எங்கள் ஆசை மாமாவே...!

"நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்" - குறள் 334

வாழ்க்கையைப் பற்றி உணர்ந்தவர்கள், நாள் என்பது ஒருவரின் ஆயுளை அறுத்துக் குறைத்துக் கொண்டேயிருக்கும் வாள் என்று அறிவார்கள் இவ்வாறு உலகப்பொதுமறையான திருக்குறளில் நம் வாழ்வியலின் யதார்த்தபூர்வ உண்மையை ஈரடிகளில் திருவள்ளுவர் அழகாய் எடுத்தியம்பியிருக்கிறார்.

நாம் வாழும் வாழ்வில் சிலரையாவது சந்தோசப் படுத்திவிடும் பாக்கியம் படைத்தவர்களாக வாழ்ந்து மடிந்துவிட வேண்டும் என்பதே எல்லோரதும் பேரவாவாயிருக்கிறது. ஆனால் எங்கள் ஆசை (மாமா) பலரை அழவைத்துப் பார்த்து (வலி வேதனைகளால்) அதன்மூலமாகவே உபாதைகளை தீர்த்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றியவர் என்பேன்.

உடைவு, முறிவோடு உலகமே இருண்டுவிட்ட நிலையில் எழுந்து நடக்கவும் முடியாது, வாழ்வில் இனிமேல் எழுந்துவிடவும் முடியாது எனக் கைவிடப்பட்ட பலரை தன் உடைவு முறிவின் வித்தைகளால் தூக்கி நிறுத்திவிட்டு, பலரது வாழ்வில் இரண்டாவது இன்னிங்ஸ்க்கு உயிர்பாய்ச்சிவிட்டு நிம்மதியாய் இளைப்பாறிக் கொண்டிருக்கின்றார்.

எங்கள் அப்பா (தில்லையம்பலம்) எங்கள் இன்னுமொரு மாமா முருகுப்பிள்ளை, மாமா பேச்சிமுத்து என்று சண்டை சச்சரவுகள் ஏதுமற்று பாசப்பிணைப்புடன் போட்டி பொறாமைகளற்று அக்கம் பக்கமாய் அருமையாய் வாழ்ந்திட்ட குடும்பங்கள் நாங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகுப்பிள்ளை மாமாவின் மறைவு, அப்பாவின் மறைவு, இப்போது இறுதியாய் நாங்கள் 'ஆசை' ஆசை என்று அழைக்கும் மாமாவும் அமைதியாய் போய் சேர்ந்திருக்கிறார்.

எங்கள் அப்பா ,அம்மா காலத்தில் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை இன்று குடும்பத்தில் இருக்கும் ஒவ்வொரு வாரிசுகளுக்கும் வாழும் பாக்கியம் கிட்டவில்லை. திக்கு திசை மாறி இப்போது எங்கள் அடுத்த தலைமுறை வெவ்வேறு இடங்களில் வாழ்வுக்காய் போராடிக் கொண்டிருக்கிறோம் எனபதுதான் வேதனைக்குரியது.

தான் வாழும் காலத்தில் தான்மட்டும் சுகபோகங்களை அனுபவித்துவிட்டு போய்ச்சேர்ந்தோருக்கு மத்தியில் எங்கள் ஆசை (மாமா) பலருக்கு நோய்நொடி தீர்த்த உத்தமராய் வாழ்ந்து மறைந்தார் என்பது என்றைக்குமான சந்தோசம்.

வாழ்வு நிலையில்லாதது என்பதை மீண்டுமொரு தடவை நம்புவோம், சென்று வாருங்கள் ஆசை, உங்கள் ஆத்ம ஈடேற்றத்துக்காய் எங்கள் குடும்பம் பிரார்த்திக்கின்றது.

**அமரர் தில்லையம்பலம் குடும்பம்**
**(துரை மச்சான் குடும்பம்)**

**"மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்**
**ஒருவுக ஒப்பிலார் நட்பு"**

**பொருள் :-**

குற்றம் அற்றவரோடு நட்புக் கொள்க, உலகோடு ஒத்து வராதவரின் நட்பை விலை கொடுத்தாவது விட்டு விடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேச்சு முத்தே!

தென்றலும் தென்னங்கீற்றும்
சல்லாபிக்கும் சலசலப்பில்
சதிராடும் முற்றிய நெற்கதிரே,
தலை கவிழ்ந்து நிற்பதேனோ?

மனங்கவர் மருதமாம் தம்பலகாமமே,
மங்களமிழந்ததேனோ?
கண்கலங்கி என் காதில் கூறவருவதென்னவோ?

என்ன?
முறிவு வைத்தியத்தின்
முதல்வன், முன்பொருபோதும் காணா
என்புக்கட்டு எல்லாளன்
எட்டாவுலகு சென்றதாலா?

தண்ணிலம் சுமக்கும் தம்பலகாமமே,
நீ மட்டுமா அவரை இழந்தாய்
கன்னலும் பன்னலும் நிறைந்த
கிண்ணியாவும் இழந்து
விசும்புவதைக் கேள்.

பேச்சிமுத்து,
அவர் பேச்சில் உதிரும்
முத்தெடுத்து
அன்புச்சரம் சூடார் யார் உளர்?
மூச்சுள்ள வரை
அவர் நாடி நரம்பெல்லாம்
உதிரமா ஓடியது?
சேவையன்றோ ஓடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழி மத பேதமெனும்
இழிபொருள்
உச்சம் கண்ட வேளையிலும்
எச்சமூகத்தினரும் நலமே காண
இச்சை கொண்டுழைத்த
இச்சகம் போற்றும்
சேவைச் செம்மலர்

கண்ணியம் குறையா சேவையால்
புண்ணியம் பல சேர்த்தவர்
கிண்ணியா தம்பலகாம உறவுக்கு
துன்னிய பாலம் சமைத்தவர்

என்பு முறிவுகளை மருந்தோடு
அன்பு கலந்து ஒட்டியவர்
தேர்ந்தவர் கைவிட்ட முறிவுகளையும்
ஒட்ட செய்யும்
கைதேர்ந்த வித்தைகாரர்

விதி முடிய
விண்ணகமேக
மண்ணகத்தில்
விடைபெற்றாரே!
எமை
விழிநீர் சொரிய விட்டாரே!

என்பு முறிவு
இனி முறிவுதானோ?
முடவராய் எமை ஆக்காதிருக்க
முடிவு ஏதும் எடுத்தீரோ?
உம் எச்சமாய்
யாரையும் விட்டீரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாலத்தில் கணக்கு முடிய - அவரை
காலன் அழைத்துக் கொண்டாலும்
காலத்தையும் வென்ற
அவர் நாமமும்
நெய்தல் - மருதம் உறவுப்பாலமும்
நித்தியமாகிட
தந்தைக்கு மகனாற்றுமுதவி
தனயனாற்றுவானோ?

முலவபர் ஏ. முத்தலிப்
குறிஞ்சாக்கேணி - 02
கிண்ணியா

**நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம் மிக்க**
**நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்**
**குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு**
**இணங்கி இருப்பதுவும் நன்று**

பொருள் :-

நல்லவர்களைக் காண்பதும், நமக்கு நன்மை பயக்கும் அவர் சொல்லைக் கேட்பதும், அவர்கள் குணங்களை மற்றவரிடத்தில் சொல்வதும், அவர்களோடு சேர்ந்து இருப்பதும் நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நின்றவை

இளைய குட்டி பேச்சி முத்து அப்பா
எனக்கு 10 ஆண்டுகள் மூத்தோர்
என் தந்தை காலத்து நண்பர் அவர்
ஒரு விவசாயியும், பூசகரும் கூட
கால்நடை வைத்தியமும் கைவந்த கலை.
அன்றிருந்த வைத்தியத் துறையே
பிற்காலத்து முறிவு வைத்தியமாச்சு
கற்றார் வைத்தியத்தை கசடறவே
கற்றபின் நின்றக அதற்குத் தக.
பற் பலருக்கும் பல ஊருக்கும்
பாராட்டும் வண்ணம் பலமாகப் பெற்றார்
நற்பண்பும் நம் உறவுடனே
என் தந்தை உடனான நட்பால
தனையன் என்னுடனும் நல் உறவே.
பழமை உறவுடனே - பண்பாகப்
பழனமச் செய்திகளை இரை மீட்போம்.
ஓர் இரு மாதங்கள் சந்திப்பில்லை
அவரும் உள் உறக்கமானார்
எனக்கும் செய்திகள் கட்டதில்லை
அவர் உயிர் உடம்பை விட்டு அகன்றது பற்றி
செவிக் கெட்டியது தேற்றிக் கொண்டேன்
சுதந்திரம் உடம்புக்கும் உயிருக்கும்
முறிந்தது முறிவு வைத்தியம் - பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தது பிள்ளை இருவருள்
காப்பார் இவர்களே இனி வரும் நாளில்
நினைவுகள் நின்றன.

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ் உலகு. (கு. 336)

**இவை**
**உடன் பிறவா முருகானந்த மூர்த்தி**
**நடேசுவர நிழல் - தம்பலகாமம்,**
**17.10.2022**

### ஒரு சொல் பல பொருள்

1. அரி - திருமால், அரிதல், சிங்கம்
2. அணி - அணிகலன், அழகு, உடுத்து
3. அன்னம் - சோறு, ஒரு வகைப் பறவை
4. அகம் - வீடு, மனம், உட்பகுதி
5. அரவம் - ஒலி, பாம்பு
6. அலை - கடல் அலை, திரி
7. அணை - படுக்கை, தடுத்தல், தழுவு
8. அகல் - நீங்கு, விளக்கு ஏற்றும் தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியா சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் ஆலோசகர் ஆசிரியர் ஜனாப். ஹசன அவர்களின் இரங்கல் உரை

ஒவ்வொரு தனிமனிதனின் பிறப்பும் ஒரு நிகழ்வாகும் ஆனால் ஒவ்வொரு தனி மனிதனின் இறப்பும் வரலாறு ஆவதில்லை. இன்று எம்மை மட்டுமல்ல இவ்வுலகையே விட்டுபிரிந்து சென்று விட்ட பேச்சு முத்துப்பரியாரி அவர்களின் இறப்பு யாராலும் மறக்க முடியாத, நினைவிலிருந்து பிரிக்க முடியாத ஒரு வரலாறாகும். இவ் கிண்ணியா மக்களுடன் இரண்டற கலந்து வாழ்ந்த ஒருவர். ஒவ்வொருவர் உள்ளத்திலும் பிரிக்க முடியாத இடம் பிடித்த ஒருவர் கிண்ணியா மக்களுக்கும் தம்பலகாம மக்களுக்குமிடையே நீண்ட கால தொடர்பு இருந்த போதிலும், பேச்சுமுத்துப்பரியாரியாருடன் இருந்த தொடர்பு உறவு எல்லா வகையிலும் தனித்துவம் கொண்டவையாகும்.

எமது நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பயங்கரவாதச்சூழல் நிலவியிருந்த காலத்தில் கிண்ணியாவுக்கு தன்னம் தனியாக துவிச்சக்கர வண்டியில் வந்து தனது வைத்தியத் தொழிலைச் செய்து விட்டுச் செல்வார். கிண்ணியா மக்கள் யாருக்கேனும் கை, கால் முறி, உடைவு ஏற்பட்டு விட்டால் உடனடியாக பேச்சுமுத்துபரியாரி அவர்களை தொடர்பு கொண்டு மருந்து கட்டிக்கொள்வார்கள் யாரேனும் வைத்தியசாலைக்கு மருந்து கட்டக்கொண்டு செல்வோம் என்று கூறினால் இங்குள்ள பெரியவர்கள் "இல்லை இந்த முறிவை நல்ல முறையில் மருந்து கட்டி குணபடுத்தக் கூடியவர் பேச்சுமுத்து பரியாரி ஒருவரே தவிர வேறு யாருமில்லை" உடனே அவரிடம் கொண்டு செல்லுங்கள் என்று கூறுவார்கள். அந்த அளவிற்கு கிண்ணியா மக்கள் மனதில் பதியப்பட்டவர், இடம் பிடித்தவர், நம்பிக்கைக்குரியவர் பேச்சிமுத்து பரியாரி அவர்கள்.

அவர் முறிவுக்கு மருந்து கட்டும் போது பணத்தை எதிர்பார்த்தவர் அல்ல. உரியவர் கொடுக்கும் பணத்தை உவப்புடன் பெற்றுக் கொள்வார். ஏழை மக்களிடம் பணம் பெறாமலும் முறிவுக்கான மருந்தை கட்டிவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று விடுவார் இதனால்த்தான் கிண்ணியா மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் இடம்பிடித்த ஒருவராய் அவரால் இருக்க முடிந்தது. பேச்சிமுத்து பரியாரியார் இறந்து விட்டார் என்ற துக்கச் செய்தியை கிண்ணியா மக்கள் கேள்விப்பட்டதும் தங்களின் உடன் பிறப்பு இறந்து விட்டது போல துக்கம் தாங்க முடியாமல் மிகவும் வேதனைப்பட்டு இறைவா அவருக்கு மறுவுலகில் நல்ல இடத்தை கொடுப்பாயாக என தம் இரு கைகளையும் ஏந்தி வேண்டிக் கொண்டனர்.

நன்றி

## உலக பொது அறிவு

1. உலகில் மிகப்பெரிய விலங்கு - திமிங்கிலம்
2. உலகில் உயரமான விலங்கு - ஒட்டகச்சிவிங்கி
3. உலகில் உயரமான மலை - இமயமலை
4. உலகில் மிக ஆழமான ஆழி - மரியானா ஆழி (11.522 மீற்றர்)
5. உலகில் மிகப்பெரிய நகரம் - லண்டன்
6. உலகில் பெரிய பாலைவனம் - சஹாராப் பாலைவனம்
7. உலகில் மிகப்பெரிய மேட்டுநிலம் - திபந் மேட்டுநிலம்
8. உலகில் அதிக எரிமலைகள் உள்ள நாடு - இந்தோனேஷியா
9. உலகில் அதிக மழை பெறும் நாடு - சீராப்புஞ்சி
10. உலகிலேயே மிக நீளமான மலை - அந்தீஸ்மலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



அன்னை மடியில்
17 - 03 - 1938

இறைவன் அடியில்
27 - 09 - 2022

தம்பலகமம் புதுக்குடியிருப்பினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். இளையகுட்டி பேச்சிமுத்து

(முறிவு வைத்தியர்)

**அவர்கள் 27.09.2022ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார். இளையகுட்டி நாகம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வனும், மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், பாக்கியம், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, அருந்தவம், புனிதவதி, கோணலிங்கம ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற விஜயகுமாரி, காலஞ்சென்ற ரமேஸ்குமார், ஜெயகுமாரி, சுரேஸ்குமார், டினேஸ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பராஜா, உதயகுமார், நிவாசினி ஆகியோரின் மாமனாரும், சர்விகா, மிதுனா, கிருட்சனா, கனிஷ்கா, யதுட்சனா, மிதுஷனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.09.2022 அன்று மாலை 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் உள்ள இல்லத்தில் இடம்பெற்று நல்லடக்கத்திற்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

புதுக்குடியிருப்பு, தம்பலகமம்.
0766200955

தகவல்
குடும்பத்தினர்

SHAHANA GFX 0771815140



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம் உடலைப் பற்றி அறிவோம்...

- பூரண ஆயுள் என்பது 120 ஆண்டுகள் ஆரோக்கியமாக வாழ்வது.
- ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகளைக் குறிக்கும்.
- மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.
- மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு தாமிரம் உள்ளது.
- ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீட்டர்.
- நமது இரத்தம் ஒரு நாளில் 30 கோடி கி.மீ பயணம் செய்கிறது.
- நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறை சுவாசத்தை உள்ளெடுத்து வெளியே செலுத்துகிறது.
- நமது இதயம் ஒரு நாளில் 1,03,689 முறை துடிக்கிறது.
- மனிதனின் நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் எண்ணிக்கை மூன்று ஆயிரம்.
- உடலில் உள்ள மின்சாரத்தின் அளவு 25 வாட்.
- ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் இரத்தத்தின் அளவு 5 லிட்டர்.
- கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
- மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.
- கண் தானத்தில் கறுப்பு விழிகள் மட்டுமே அடுத்தவருக்குப் பொருத்தப்படுகின்றன.
- மனித உடலில் மிகவும் பலமான பகுதி விரல் நகங்களே. அதில் கெராடின் சத்து உள்ளது, இது காண்டா மிருகத்தின் கொம்புகளில் காணப்படுவதாகும்.
- மரணத்திற்கு பிறகும் கூட மனிதனின் நகத்திற்கு ஒன்றுமே ஆகாது....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனிதன் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவருடைய உயரம் 8mm அதிகரிக்கும், தூங்கி எழுந்தப் பிறகு மீண்டும் பழைய உயரமே இருப்பார்.

## ரத்த நாளங்கள், செல்கள் :

01. நமது உடல் எடையில் 14 சதவிகிதம் எலும்புகளால் ஆனது, 7 சதவிகிதம் ரத்தம் ஆகும்.

02. நுரையீரலில் 300,00 மில்லியன் ரத்த நாளங்கள் உள்ளன. இவை அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டால் அதன் நீளம் 2400 கிலோமீட்டராக இருக்கும்.

03. ஒவ்வொரு சிறுநீரகமும் ஒரு மில்லியன் வடிகட்டிகளை (Filters) கொண்டுள்ளது. அவைகள் ஒரு நிமிடத்திற்கு 1.3 லிட்டர் ரத்தத்தை வடிகட்டுகிறது. மேலும் ஒரு நாளில் 1.4 லிட்டர் சிறுநீரை வெளியேற்றுகிறது.

01. கண்களின் தசையானது ஒருநாளில் 100,000 முறை அசைகிறது, அதற்கு சமமான வேலையை உங்கள் கால்களுக்குக் கொடுக்க வேண்டும் என்றால் தினமும் 80 கிலோமீட்டர் தூரம் நடக்க வேண்டும்.

02. மனிதன் ஒரு அடி எடுத்து வைக்க 200 தசைகள் பயன்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கால்கள் :

01. காலின் பெருவிரல் இரண்டு எலும்புகளைக் கொண்டிருக்கும், ஆனால் மற்ற விரல்கள் ஒவ்வொன்றும் மூன்று எலும்புகளைக் கொண்டிருக்கும்.
02. கட்டை விரலின் நீளமும், மூக்கின் நீளமும் சமமாகும்.
03. மனித கால்களில் ஒரு ட்ரில்லியன் வரையிலான பக்டீரியாக்கள் இருக்கும்.

## மூளை :

01. மனித மூளையில் சுமார் 100 பில்லியன் நரம்பு செல்கள் உள்ளன, 35 வயது அடைந்தது முதல் மூளையில் தினமும் 7000 நரம்பு செல்கள் இறக்கின்றன.
02. நாம் சுவாசிக்கும் மொத்த ஆக்சிஜனில் 20 சதவிகிதம் மூளைக்குச் செல்கிறது.

## இறப்பு :

மனிதன் உயிரிழந்தப் பின்பு உறுப்புகள் செயல் இழக்கும் நேரம்

கண்கள் - 31 நிமிடங்கள்

மூளை - 10 நிமிடங்கள்

கால்கள் - 4 மணிநேரம்

தசைகள் - 5 நாட்கள்

இதயம் - சில நிமிடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையடி (வாஸ்த்து) சாத்திரத்தின் படி கட்டிட அளவுகளும், அவற்றுக்கான பலாபலன்களும்

## நீள, அகலத்தின் பலாபலன்கள்

6 - நன்மை
7 - வறுமை
8 - ராஜவாழ்க்கை
9 - பெருநஸ்டம்
10 - சுபீட்சம்
11 - பலவித நன்மை
12 - குழந்தைகள் இறப்பு
13 - நோய்கள்
14 - கவலை
15 - துயரம்
16 - செல்வம்
17 - எதிரிகட்கு அச்சம்
18 - வீடு நாசமாதல்
19 - குழந்தைகட்கு நோய், வறுமை
20 - மகிழ்ச்சி
21 - நன்மைகள்
22 - எதிரிகட்கு அச்சம்
23 - தீயவிளைவுகள்
24 - சுமாரான பலன்
25 - மனைவி இறப்பு
26 - செல்வம்
27 - ஆண்டவன் கிருபை
28 - சுபீட்சம்
29 - சாதகமான பலன்
30 - இழந்த பொருட்கள் கிடைத்தல்
31 - நன்மை
32 - வீட்டை விட்டுத் துரத்தப்படுதல்
33 - செல்வம்
34 - தீரம்
35 - கால்நடைகளும் பண்ணையும் பெருகும்
36 - பேய் குடிபுகும்
37 - மிகவும் நன்மை
38 - எப்போதும் எதிரிகளின் தொல்லை
39 - செல்வச் செழிப்பு
40 - செல்வச் செழிப்பு
41 - துன்பம் இழப்பு
42 - பார்வை இழத்தல்
43 - செல்வம் பெருகும்
44 - வறுமை
45 - தீமை
46 - திருடர் பயம்
47 - திருடர் பயம்
48 - தீமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் தோற்ற தத்துவம் 96 ஆகும்

| இல | தத்துவம் | எண்ணிக்கை | விளக்கம் |
|---|---|---|---|
| 01 | பூதம் | 5 | நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் |
| 02 | பொறி | 5 | செவி, மெய், கண், நாக்கு, மூக்கு |
| 03 | புலன் | 5 | ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாக்கு |
| 04 | கண்மேந்திரியும் | 5 | வாய், கால், கை, எருவாய், கருவாய் |
| 05 | ஞானந்திரியம் | 5 | வசனம், கமனம், தானம், விசக்கம், ஆனந்தம் |
| 06 | கரணம் | 4 | மனம், புத்தி, அகந்தை, சித்தம் |
| 07 | அறிவு | 1 | |
| 08 | நாடி | 10 | இடகலை, பிங்கலை, சுமுமுனை, சீகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சவ்கினி, குடு |
| 09 | வாயுக்கள் | 10 | பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் |
| 10 | ஆசயம் | 5 | இரைக்குடல், செரிகுடல், நீர்குடல், மலகுடல், வெண்ணீர்க்குடல் |
| 11 | கோசம் | 5 | உணவுடம்பு, வளியுடம்பு, மனவுடம்பு, அறிவுடம்பு, இன்பவுடம்பு |
| 12 | ஆதாரம் | 6 | மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், ஆனாகதம், விசுத்தி, ஆக்கைை, ஓம் நமசிவாய |
| 13 | மண்டலம் | 3 | தீமண்டலம், ஞாயிறு மண்டலம், சந்திரமண்டலம் |
| 14 | மலம் | 3 | ஆணவம், கண்மம், மாயை |
| 15 | தோடம் | 3 | வாதம், பித்தம், கபம் |
| 16 | பற்று | 3 | பொருட்பற்று, புதல்வர்பற்று, உலகப்பற்று |
| 17 | குணம் | 3 | சத்துவமானது, இராசதமாவது, தாமதமாவது |
| 18 | வினை | 2 | நல்வினை, தீவினை |
| 19 | இராகம் | 8 | காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், இடும்பை, அகங்காரம் |
| 20 | அவஸ்தை | 5 | நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் கால நிறைவும் அது அழைக்கப்படும் விதமும்

01. 01 வருடம் - காகித விழா
02. 02 வருடம் - பருத்தி விழா
03. 03 வருடம் - தோல் விழா
04. 04 வருடம் - பூ விழா
05. 05 வருடம் - மர விழா
06. 06 வருடம் - கற்கண்டு விழா
07. 07 வருடம் - செம்பு விழா
08. 08 வருடம் - வெண்கல விழா
09. 09 வருடம் - மணிக்கலச விழா
10. 10 வருடம் - தகர விழா
11. 11 வருடம் - எ.்.கு விழா
12. 12 வருடம் - லினன் விழா
13. 13 வருடம் - லேஸ் விழா
14. 14 வருடம் - தந்த விழா
15. 15 வருடம் - படிக விழா
16. 20 வருடம் - பீங்கான் விழா
17. 25 வருடம் - வெள்ளி விழா
18. 30 வருடம் - முத்து விழா
19. 40 வருடம் - மாணிக்க விழா
20. 50 வருடம் - பொன் விழா
21. 60 வருடம் - மணி விழா / வைரவிழா
22. 75 வருடம் - பவள விழா
23. 80 வருடம் - அமுத விழா
24. 100 வருடம் - நூற்றாண்டு விழா
25. 1000 வருடம் - மில்லேனிய விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிரிப்பு இரகசிய முறை

இன்பத்தில் சிரிப்பவன் சிறியோன்
துன்பத்தில் சிரிப்பவன் பெரியோன்
பொருளுக்குச் சிரிப்பவன் மனிதன்
அருளுக்குச் சிரிப்பவன் ஞானி
மோகத்தில் சிரிப்பவன் வெறியன்
சோகத்தில் சிரிப்பவன் அறிஞன்
முன்நின்று சிரிப்பவன் காரியக்காரன்
பின்நின்று சிரிப்பவன் கழுத்தறுப்பான்
தொடர்ந்து சிரிப்பவன் பைத்தியக்காரன்
இடமறிந்து சிரிப்பவன் படித்தவன்.


### கல்வியின் மகிமை

கல்வியுள்ளவரே...!
கண்ணுள்ளார் எனலாம்
கல்வியில்லாதவர் கண்
புண்ணென்றே பன்னலாம்
கல்வி மிகுந்திடில்
கழிந்திடும் கடமை...!
கற்பதுவே உன் முதற் கடமை...!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவலைகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ජ්‍යෙෂ්ඨ පුරවැසියන්ගේ සමාජය
சிரேஷ்ட பிரஜைகள் சங்கம்
Senior Citizen's Society

விருதாளர் நிகழ்வு - 2020

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக இன மத பேதமின்றி
தனது வைத்திய சேவையை செய்து வரும் இளைய குட்டி பேச்சி முத்து
என்பவரின் அர்ப்பணிப்பான சேவையை பாராட்டி
எமது சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தினால்
அவருக்கு மருத்துவ முத்து என பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

எம்.எம்.எம். சரிபு
தலைவர்

எம்.ரீ. சுஹுள்ளாகான்
செயலாளர்

Date: 22.02.2020



ஆதி கோணநாயகர் தேவஸ்தானம்

பாராட்டுப்பத்திரம்



# "மருத்துவமுத்து" பட்டம் வழங்கி கௌரவிப்பு


(திருமலை மேலதிக நிருபர்)

அரை நூற்றாண்டுக்கு மேலாக இன, மத பேதமின்றி அர்ப்பணிப்புடன் முறிவு வைத்திய சேவையாற்றிவந்த பேச்சி முத்து பரியாரின் சேவை நலனைப் பாராட்டி சிரேஷ்ட பிரஜைகள் சங்கம் கடந்த ஞாயிறு மாலை அவரது இல்லத்திற்கு சென்று பாராட்டு நிகழ்வை நடத்தியது.

சங்கத்தின் உறுப்பினர்கள், அபிமானிகள், பரியாரியின் குடும்பத்தினர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் இவருக்கு பொன்னாடை போர்த்தி "மருத்துவமுத்து" என்ற பட்டமும் வழங்கி பொற்கிழியும் வழங்கப்பட்டது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குடும்பத்தின் குலவிளக்காய் அன்பின் உறைவிடமாய் எமக்கெல்லாம் வழிகாட்டியாய் எமது இல்லத்தில் இருந்து 2022.09.27ந் திகதி இறையடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் வைத்தியர் திரு.இ.பேச்சிமுத்து அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டவுடன் எமது இல்லம் வந்து ஆறுதல் கூறியோருக்கும், இறுதிக் கிரிகையில் கலந்து கொண்டோருக்கும், அன்னாருக்கு இரங்கல் உரை ஆற்றிய அனைவருக்கும் மற்றும் தொலைத்தொடர்புகள், முகநூல் மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், மலர் வளையங்கள் சாத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி காட்சிப்படுத்தியோருக்கும், பல வழிகளிலும் உதவிய உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் உணவு தந்து உபசரித்த அனைவருக்கும் எமது அன்புத் தந்தை சுகயீனம் உற்றிருந்த வேளை வீடு தேடிவந்து வைத்தியம் செய்த வைத்தியர்கள, மருத்துவ உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இம் மலர் சிறப்புற உருவாகுவதற்கு ஆங்கங்களை மனமுவந்து தந்துதவிய அன்பர்களுக்கும் இவ்மலரினை சிறப்புற வடிவமைத்து தந்த SS Digital's நிறுவனத்தினருக்கும் எமது குடும்பம் சார்ந்த மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குடும்பத்தினர்
புதுக்குடியிருப்பு
தம்பலகாமம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

**இளையகுட்டி + நாகம்மா**

- பாக்கியம் + சின்னத்தம்பி
- கணபதிபிள்ளை + தெய்வானை
- **பேச்சிமுத்து**
- அருந்தவம் + கந்தசாமி
- புனிதவதி + பரசுராமன்
- கோணலிங்கம் + மணியம்மா

**கந்தையா + பொன்னம்மா**

- துரைக்குட்டி
- தங்கமலர்
- அரசலிங்கம் +சகுந்தலா
- **மகேஸ்வரி**
- இன்பமலர் + முருகுப்பிள்ளை
- பூரணம் + குலசிங்கம்

**பேச்சிமுத்து + மகேஸ்வரி**

- விஜயகுமாரி (அமரர்) + புஸ்பராஜா
  - சர்விகா
  - மிதுலா
  - கிருட்ஷனா
- ஜெயகுமாரி + உதயகுமார்
  - கனிசிகா
  - யதுட்சனா
  - மிதுட்சனா
- சுரேஸ்குமார் + நிவாசினி
- டினேஸ்குமார்
- ரமேஸ்குமார் (அமரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைதிருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SSDK017